**PEPERIKSAAN PERCUBAAN SPM**
**TINGKATAN 5**
**TAHUN 2022**

# KESUSASTERAAN TAMIL

## தமிழ் இலக்கியம்

**9217/1**
**2 JAM 30 MINIT**

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

ARAHAN:

1. Buka kertas soalan ini apabila diberitahu.
2. Tulis nama dan tingkatan anda pada ruang yang disediakan.
3. Jawapan anda hendaklah ditulis pada kertas edaran yang disediakan.
4. Kertas soalan dan skrip jawapan hendaklah diserahkan kepada pengawas peperiksaan pada akhir peperiksaan.

| UNTUK KEGUNAAN PEMERIKSA | | |
|---|---|---|
| NAMA PEMERIKSA : | | |
| Soalan | Markah Penuh | Markah Diperolehi |
| கேள்வி 1-3 | 10 | |
| கேள்வி 4-6 | 15 | |
| கேள்வி 7-9 | 15 | |
| கேள்வி 10 /11 | 20 | |
| கேள்வி 12/13 | 20 | |
| கேள்வி 14/15 | 20 | |
| மொத்தம் | 100 | |

NAMA: ______________________________________ KELAS: ___________________

Disediakan Oleh: Penyemak I: Penyemak II:

GMP: GKK KP: BUVA PENGETUA

CamScanner

*[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]*

**பாகம் - ஒன்று**
**[ 40 புள்ளி ]**

**கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**பிரிவு ஒன்று : கவிதை**

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
**புள்ளின ஓசையிலே** – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

**(கவிஞர் தி.அரங்கசாமி)**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?
(2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசை நயங்கள்** இரண்டனை எழுதுக.
(4 புள்ளி)

3. i) **புள்ளின ஓசையிலே** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

ii) இவ்வடிகளின் மூலம் காலைப் பொழுது பிறப்பதால் விளையும் **நன்மை யாது** என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்? (2 புள்ளி)

[10 புள்ளி]



CamScanner

## *பிரிவு இரண்டு : நாடகம்*

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியர் **ஈடுபட்ட துறை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. i) பிசிராந்தையார் நாடகத்தின் **சோழ நாட்டுப் படைத்தலைவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) பிசிராந்தையார் நாடகத்தின் **உத்தி** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

மேற்படியார் : எல்லாரும் நல்லவர், எல்லாரும் செல்வந்தர் என்ற நிலைமையால் மக்கள் உள்ளம் மெல்லிதாகி விட்டது; வரும் துன்பத்தைச் சிறிதும் தாங்கவில்லை என்கிறீர்கள். இது எனக்கு விளங்கவில்லை.

*(திடும் என ஓர் ஓசை கேட்டு இருவரும் திரும்புகின்றார்கள். ஓடையைக் கடந்த யானை அந்த ஓடை மேலிடப்பட்ட பலகை முறியத் திடும் என ஓடையில் விழுகிறது.)*

பிசிராந்தையார் : அச்சப்பலகை ஆனையைத் தாங்கவில்லை மேற்படியாரே!

மேற்படியார் : நல்ல எடுத்துக்காட்டு, **மெலிந்த உள்ளம் வெம்மையைத் தாங்காது**. விளங்கிற்று.

பிசிராந்தையார் : தீயவர் சிலரும் வறியர் சிலரும் தோன்றத்தான் வேண்டும் என்று ஏன் சொல்வேன் எனில், இவ்வாறு தீயவர் சிலரும் நாட்டில் தோன்றினால், வாழ்க்கையில் சுவைப் பகுதி இது, சுவையற்ற பகுதி இது என்று உணர முடியும். அது மட்டுமன்று, அப்போதுதானே இன்னும் என்ன வேண்டும் மக்களுக்கு என்று நமக்கும் புரியும்.

**( காட்சி 7, பக்கம் 36,)**
**( உமா பதிப்பகம் 2020 )**

i) இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **படிப்பினை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

iii) **மெலிந்த உள்ளம் வெம்மையைத் தாங்காது** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]



CamScanner

## ***பிரிவு மூன்று : நாவல்***

7. வாடா மலர் நாவல் ஆசிரியர் **பெற்ற விருது** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. i) வாடா மலர் நாவலின் **துணைக்கதைப்பாத்திரம்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **கதைப்பின்னலின் சிக்கலைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> அன்று மாலை அம்மா வழக்கம்போல் தன் கூந்தலுக்குப் பூ வாங்கிக் கொண்டிருந்தாள். நாள்தோறும் மாலையில் பூக்காரி வந்து பூச்சரம் கொடுத்து விட்டுப் போவது வழக்கம். பூ வாங்கிக் கொண்டிருந்த போது அந்த வழியாகச் சுடர்விழி வந்தாள். அவளைப் பார்த்தவுடன், "இன்னொரு சரம் கொடு" என்று பூ வாங்கிக் கொண்டாள். "சுடர்விழி! இங்கே வந்துபோ" என்று அம்மா அழைத்தாள். சுடர்விழி வந்தாள். "திரும்பு" என்று அம்மா அவள் தலையை திருப்பிப் பூச்சரத்தைச் செருகத் தொடங்கினாள்.
>
> சுடர்விழி பொல்லாத தவறு செய்துவிட்டு நடுங்கியவள் போல் அஞ்சி, "வேண்டா அத்தை. வேண்டா வேண்டா. **சித்திக்குக் கோபம் வரும்**" என்று அம்மாவின் வலக்கையைத் தன் இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு வேண்டினாள். அம்மா ஒன்றும் பேசாமல் அயர்ந்து நின்றுவிட்டாள். "என் மேல் வருத்தமா அத்தை? நீங்க சொன்னபடி கேட்கவில்லை என்று கோபமா?" என்று கலக்கத்தோடு அம்மாவின் முகத்தைப் பார்த்தாள். அம்மா அவளுடைய இரண்டு கன்னங்களையும் தன் கைகளால் பற்றிக் கொண்டு அவளுடைய உச்சியை மோந்து, நீ பெண் அல்ல சுடர்விழி! நீ ஒரு தெய்வம். இந்த வயதிலேயே இவ்வளவு அறிவோடு, அடக்கத்தோடு நடக்கிறாயே! நீ எங்கே போனாலும் நல்லபடி வாழ்வாய் அம்மா" என்று வாழ்த்தி அனுப்பினாள்.
>
> **(அத்தியாயம் 8, பக்கம் 57 - 58,)**
> **(மல்தி எடுகேஷனல் புக் எந்தர்பிரைசு, 2020)**

i) இச்சூழலில் வெளிப்படும் சுடர்விழியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணி** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

iii) **சித்திக்குக் கோபம் வரும்** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]



CamScanner

## பாகம் இரண்டு
## [ 60 புள்ளி ]

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

10. மேற்காணும் கவிதையின் **கருத்துகளைத் தொகுத்து** எழுதுக.

**காலம் பறக்குதடா!**

காலம் பறக்குதடா! - தமிழா
வாழப் பறந்திடடா!
கோளம் வலம்வரவே - உலகம்
கோலம் புனையுதடா!
நாளும் நடக்கையிலே - புதுமை
நாடிப் பெருகுதடா!
வாழும் வகைகளிலே - வளங்கள்
வந்து குவியுதடா!

நேற்றுத் திருந்தியவர் - உன்னை
நோக்கிப் பழகியவர்
ஊற்றுப் பெருக்கெனவே - இன்பம்
ஊறத் திளைக்கின்றார்!
காற்றுக் கிடையினிலே - அலை
கத்தும் கடலினிலே
ஆட்டம் நடத்துகின்றார்! - நீயேன்
ஆழக் கிணற்றிலுள்ளாய்?

நாளும் முழங்குகின்றாய் - அந்த
நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
மோதிக் கெடுத்திடுவாய்!

ஒன்றிச் செயல்புரிந்தால் - நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! - சின்னாள்
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! - தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

**- கவிஞர் கரு. திருவரசு**

[ 20 புள்ளி ]



**அல்லது**

CamScanner

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

## சஞ்சிக்கூலி

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் – உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? – உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம்சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்!-வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்

**- கவிஞர் காரைக்கிழார்**

i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **நயங்கள்** மூன்றனை எழுதுக. (10 புள்ளி)

ii) இக்கவிதை வழி நீ பெற்ற **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]



CamScanner

## பிரிவு இரண்டு : நாடகம்

.12. (i) பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. [10 புள்ளி]

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **சமுதாயப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக. [10 புள்ளி]

**அல்லது**

.13. (i) கோப்பெருஞ்சோழனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. [10 புள்ளி]

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **கதைப்பின்னலை** விளக்கி எழுதுக.

அ. தொடக்கம்
ஆ. வளர்ச்சி
இ. முடிவு

[10 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14. வாடா மலர் நாவலில் தானப்பனின் **பண்பு நலன்களை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**அல்லது**

15. வாடா மலர் நாவலின் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**தேர்வுத்தாள் முடிவுற்றது**
**KERTAS PEPERIKSAAN TAMAT**



Selamat mengulangkaji dari telegram@soalanpercubaanspm

CamScanner

CamScanner